


# சிமா பருத்தி அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சிக்கழகம் (*Since 1974*)

FIRST TIME MAKE IN INDIA

இந்தியாவின் பருத்தி பொருளாதாரத்தை
வளர்ச்சிப்பாதைக்கு எடுத்துச் செல்லுதல்

SIMA CDRA

# பருத்தி எடுக்கும் கருவி

மத்திய வேளாண்மை அமைச்சகத்தின் பொறியியல்
மற்றும் தொழில்நுட்ப துறையின் சான்று பெற்றது.

## தன்னிறைவை நோக்கி






**சிமா பருத்தி எடுக்கும் கருவி** – எளிதில் கையில் இயக்கக்கூடிய இந்த கருவியால் பருத்தி விவசாயிகள் ஒரு ஆள் எடுக்கும் பருத்தி அளவைவிட ஆறு மடங்கு இலைச்சருகு இல்லாமல் எடுக்கமுடியும். தானியங்கி பருத்தி சேகரிக்கும் பை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளதால் பருத்தி மாசுபடாது.





## தொழில்நுட்ப குறிப்புகள்

| | |
|---|---|
| மாதிரி | சிமா பருத்தி எடுக்கும் கருவி |
| அளவு | 280 X 90 X 110 மி.மீ |
| எடை | 600 கிராம் |
| மோட்டார் திறன் | 11 வாட்ஸ் |
| வோல்ட் (விசை) | 12 வோல்ட் |
| இயக்கப்படுவதற்கு தேவையான மின்சாரம் (மின்னாற்றல்) | 1.4 ஆம்ஸ் |
| சுழற்ச்சியின் வேகம் (சுற்றும் திறன்) | 5400 ஆர்.பி.எம் |
| பேட்டரி மாடல் (மின்கலன் மாதிரி) | 12 வோல்ட் மின்சாரத்தை மீண்டும் சேமித்து வைக்கும், எட்டுமணி நேரம் வேலை செய்யக்கூடியது |
| மின்சார சேமிப்பு நேரம் | தோரயமாக 8 மணி நேரம் |











## பயன்படுத்தும்முறை:



1. மின்கலன் (பேட்டரி) இடுப்பு பையில் வைத்து மூடவும்.
2. மின்கலன் (பேட்டரி) தாங்கிய பையை இடுப்பு பகுதியில் கச்சையால் இறுக்கமாக அணிந்து கொள்ளவும்.
3. பருத்தி எடுக்கவும் கருவி மற்றும் மின்கலன் (பேட்டரி) மின் இணைப்பை பொருத்தவும் (வயர்பின்னை சேர்க்கவும்).
4. பருத்தி சேகரிக்கும் பையை இடுப்பில் பின் பக்கம் இருக்குமாறு இறுக்கமாக கட்டவும்.
5. கருவியில் பருத்தியை வெளியில் தள்ளும் வாய்பகுதியுடன் பருத்தி சேகரிக்கும் பையின் வாய்பகுதியை இணைத்து கட்டவும்.
6. மின்கலன் (பேட்டரி) பொத்தானை அழுத்தவும்.
7. பருத்தி எடுக்கும் கருவியில் உள்ள விசை பொத்தானை அழுத்தி பருத்தியை எடுத்கத்தொடங்க வேண்டும்.
8. நான்கு அல்லது ஐந்து கிலோ பருத்தி பையில் சேர்ந்தவுடன் பையை அவிழ்த்து மற்றொரு மாசு இல்லாத பையில் கொட்டி சேகரிக்க வேண்டும்.
9. மின்கலன் (பேட்டரி) பராமரிப்பு பற்றிய விளக்க கையேடு இத்துடன் கொடுக்கப்பட்டுள்ளது. அதன்படி பராமரிப்பு செய்தால் மின்கலனின் (பேட்டரியின்) ஆயுட்காலத்தை நீட்டிக்க முடியும். (நீண்டகாலம் உழைக்கும்)
10. கருவியை பயன்படுத்தும்போது கவனமாக பயன்படுத்த வேண்டும். குழந்தைகள் பயன்படுத்துவதை தவிர்க்கவும்.

## சிறப்பு அம்சங்கள்:

1. குறைவான விலை, முதலீட்டை குறுகிய காலத்திற்குள் திரும்ப பெற்றுக்கொள்ளக் கூடியது.
2. பருத்தி எடுக்கும் கூலி 70 சதம் வரை குறைகிறது.
3. கூலி ஆள் வைத்து எடுப்பதைவிட, ஆறு மடங்கு அதிகமாக பருத்தி எடுக்கும் திறன் மிக்கது.
4. மாசு இல்லாத பருத்தி.
5. இலைச்சருகு பருத்தியுடன் சேர்ந்து வராது.
6. பயன்படுத்துவோருக்கு நம்பகத் தன்மையுடையது.
7. எல்லாவித இரகப் பருத்திகளையும் எடுக்க உகந்தது. (ஆற்றல் வாய்ந்தது).
8. பராமரிப்பு செலவு குறைவு.
9. கருவிக்கான முக்கிய உதிரிபாகங்கள், பழுதுபார்ப்பதற்கான உபகரணங்கள, மற்றொரு டீ.சி மோட்டாரும், மற்றும் இப்பொருட்களை வைக்க பாதுகாப்பு மிக்க பெட்டியும் உள்ளது.



FIRST TIME MAKE IN INDIA

sima CDRA

# சிமா பருத்தி அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சிக்கழகம்

1. சிமா பருத்தி அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சிக்கழகம் மூலம் தரமான இரகப்பருத்திவிதைகள் 600 டன் வரை ஒரு வருடத்திற்கு உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வினியோகிக்கிறது .
2. சிமா பருத்தி விதைகள் அதிக மகசூலும், தரமும் உடையது.
3. 25 ஆயிரம் விவசாயிகளுக்கு, 25 ஆயிரம் ஹெக்கடர் பரப்பளவில் நேரடியாக கண்காணித்து பயிற்சி அளித்துவருகிறது. மேலும் மறைமுகமாக தரம்மிக்க பருத்தி சாகுபடியில் விவசாயிகளை ஊக்குவித்து வருகிறது.
4. ஆராய்ச்சிக்கு தேவையான உபகரணங்களுடன் கூடிய ஆராய்ச்சி நிலையம், பருத்தி அறவை நிலையம், சுத்திகரிப்பு நிலையம் மற்றும் தேவையான பண்ணை நிலம் உள்ளது.
5. மாறுபட்ட குணாதிசயங்களை கொண்ட 600 வகை அந்தாதி இரகப்பருத்தியை பராமரித்து பாதுகாத்துவருகிறது.
6. மத்திய மாநில அரசுடன் இணைந்து பல புதிய அபிவிருத்தி திட்டங்களை நடைமுறைப்படுத்தி துறைசார்ந்த விஞ்ஞானிகளை கொண்டு விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.
7. ஆண்டுக்கு 25 டன் மண்புழு உரம் மற்றும் 10 டன் உயிர் உரம் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு நேரடியாக கொடுத்து வருகிறது.
8. அங்கக பருத்தி மற்றும் கலர்ப்பருத்தி அபிவிருத்தி திட்டத்தின்கீழ் உற்பத்தி செய்து வருகிறது.
9. சிமா பருத்தி ஆராய்ச்சி நிலையம், பருத்தி உற்பத்தி விவசாய குழு, பருத்தி வியாபாரி மற்றும் தொழில் துறையினர் இவர்களுக்கும் அரசுக்கும் தொடர்பை ஏற்படுத்தி வருகிறது.
10. தென் இந்தியா முழுவதும் ஜவுளித்துறைக்கு உறுதுணையாக இருந்து வருகிறது.
11. அபிவிருத்தி மூலம் ஜவுளித்துறைக்கு தேவையான பஞ்சு தன்மைகேற்ப போதுமான பருத்தியை உற்பத்தி செய்து கொடுப்பதன் மூலம் ஜவுளி ஆலைக்கும் தரமான சீரான பஞ்சு கிடைக்கிறது. விவசாயிகளுக்கும் நல்ல வருமானம் கிடைக்கிறது.

सत्यमेव जयते

**RECOGNITION**

Recognized as Scientific and Industrial Research Organisation (SIRO)
Government of India Ministry of Science & Technology
Department of Scientific & Industrial Research Technology Bhawan
New Mehrauli Road, NEW DELHI - 110 016


**Contact**

| | | |
|---|---|---|
| உடுமலைப்பேட்டை | : | 98429 87765 |
| திருச்செங்கோடு (கொங்கணாபுரம்) | : | 98429 07765 |
| விழுப்புரம் | : | 98429 47765 |
| கும்பகோணம் | : | 98429 27765 |
| இராசபாளையம் | : | 98429 57765 |
| தேனி | : | 95668 95444 |

**Corporate Office:**

**The SIMA Cotton Development & Research Association**
41, Race Course, Coimbatore - 641 018. Tamilnadu, India
**Phone : 0422 - 2220079, Telefax : 0422 - 2220798**
**Mobile : 98429 17765, 98659 24021, 99524 27457**
E-Mail : info@simacdra.org | Website : www.simacdra.org


PRINT PARK - 98425 24737